Refugee agencies help and advice

refugee action · MIGRANT HELPLINE · scottish refugee council · REFUGEE COUNCIL · Welsh Refugee Council Cyngor Ffoaduriaid Cymru

November 2008 Tamil

# இனம்சார்ந்த கொடுமைகளால் நீங்கள் பாதிக்கப்பட்டவரா?

உங்கள் நிறம், இனம், இனம்சார்ந்த குழு, தேசிய மூலம் ஆகியவற்றின் அடிப்படையில் நீங்கள் தாக்கப்பட்டால், அச்சுறுத்தப்பட்டால் அல்லது அவமானத்திற்குள்ளாக்கப்பட்டால், நீங்கள் இனம் சார்ந்த கொடுமையால் பாதிக்கப்பட்டவராவீர்கள். இனம்சார்ந்த கொடுமையானது, ஒரு கடுமையான குற்றச் செயலாகும் மற்றும் அது பின்வருபவை போன்ற பல்வேறு வடிவங்களில் தோன்றக்கூடும்:

| | |
|---|---|
| **வாய்மொழி:** | புண்படுத்தும் சொற்கள், கருத்துக்கள், கேலிப்பேச்சு அல்லது மிரட்டல்கள்; பெயர் சூட்டி அழைத்தல் அல்லது சபித்தல்; |
| **பாலியல் தொல்லை:** | பழித்தல் அல்லது ஆபாசமான தொலைபேசி அழைப்புகள் அல்லது கடிதங்கள்; உங்கள் வீட்டிற்கு வெளியே அல்லது உங்கள் அஞ்சல் பெட்டியில் குப்பைகளைக் கொட்டுதல்; தொடர்ந்து சத்தம் எழுப்பிக் கொண்டிருத்தல்; |
| **உடல்ரீதியான வன்முறை:** | உண்மையான உடல்ரீதியான வன்முறை அல்லது அத்தகைய பயமுறுத்தல்; உங்கள் ஜன்னல் அல்லது கதவுகளை உடைத்தல் போன்றவை மூலம் உங்கள் வீடு அல்லது அல்லது சொத்திற்கு நாசம் விளைவித்தல்; |
| **இனவெறி சார்ந்த சித்திரங்களை சுவர்களில் வரைதல்:** | எழுத்துமூலம் அல்லது சித்திரங்கள் மூலம் அவமதித்தல். |

இனம்சார்ந்த கொடுமைகள் சட்டவிரோதமானவை. இத்தகைய செயல்களில் ஈடுபடும் நபர்கள் நீதிமன்றங்களில் தண்டனை பெறக்கூடும். தங்களுக்கு எதிராகவோ, தங்கள் வீடு அல்லது சொத்திற்கு எதிராகவோ மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் அச்சம் இன்றி வாழும் உரிமை அனைவருக்குமே உண்டு. காவல் துறை, உள்ளூர் குழுக்கள் மற்றும் பள்ளிகள் போன்ற அதிகார அமைப்புகளுக்கு இனம்சார்ந்த கொடுமைகளிலிருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்கின்ற மற்றும் தாக்குதல் நடத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்ற கடமை உள்ளது. நிறம், இனம், இனம்சார்ந்த குழு, தேசிய மூலம் ஆகியவற்றின் அடிப்படையில் மற்றவர்கள் மீது தாக்குதல் நடத்தும் நபர்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, அபராதம் விதிக்கப்படுவதுடன், சிறையிலும் அடைக்கப்படலாம்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் தாக்கப்பட்டால், உடனடியாக நீங்கள் காவல்துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். நீங்கள் அருகாமையிலுள்ள காவல் நிலையத்திற்குச் செல்லலாம் அல்லது 999 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, அத்தாக்குதல் இன அடிப்படையிலானது என்று காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும். இந்நிகழ்வு குறித்து காவல்துறைக்கு நீங்களாகவே நேரடியாகத் தகவல் தெரிவிக்க



Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom

OISC No: N200100132 · Community Legal Service

விரும்பாவிட்டால், காவல்துறையுடன் நீங்கள் பேசுவதற்கு உதவுகின்ற பல அமைப்புகள் உள்ளன. இந்நிகழ்வு குறித்து அவர்களுடன் நீங்கள் அந்தரங்கமாகப் பேசலாம் மற்றும் அவர்கள் உங்களுடைய ஒப்புதல் இன்றி எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள். இந்த அமைப்புகள், உங்கள் உள்ளூர் உதவி மற்றும் ஆலோசனைச் சேவை (One Stop Service), இனம் சார்ந்த சமத்துவக் குழு (Racial Equality Council), குடிமக்கள் ஆலோசனை மன்றம் (Citizens Advice Bureau), சட்ட மையம், சமுதாய மையம் அல்லது அகதிக் குழு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இது ஒரு குற்றமாக இருப்பதால், உங்களுக்கு வீட்டுவசதி அளித்துள்ளவரிடம் இது குறித்து நீங்கள் தெரிவிக்க வேண்டும். வீட்டுவசதி கூட்டமைப்புகள் மற்றும் தேவைப்படும் மக்களுக்கு வீட்டுவசதியை அளித்துவரும் இதர லாப நோக்கற்ற அமைப்புகள் மற்றும் உள்ளூர் குழுக்களுக்கு உங்களைக் கொடுமைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டபூர்வ கடமை உள்ளது.

நேரங்கள், தேதிகள் மற்றும் மிகச் சரியாக என்ன நடந்தது என்பதற்கான விவரங்கள் அடங்கிய நாட்குறிப்பு ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். இது, என்ன நடந்தது மற்றும் அது எப்போது நடந்தது என்பனவற்றை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்வதற்கும், இப்பிரச்னை எத்துணை தீவிரமானது என்பதை உங்களுக்கு உதவும் நபருக்குக் காட்டுவதற்கும் உதவும்.

## உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?

அச்சுறுத்தலை அடக்கி, இனம் சார்ந்த கொடுமைகளிலிருந்து பாதிக்கப்படுபவர்களை காப்பதற்கு உள்ளூர் குழு மற்றும் காவல்துறை எடுக்கக்கூடிய நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகள் உள்ளன. அவை கீழ்க்கண்டவையாக
இருக்கலாம்:

- அச்சுறுத்தலை மேற்கொள்ளும் நபர்களை அடையாளம் கண்டு, பொருந்தும் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்;
- வீட்டு உரிமையாளர்கள் கூடுதல் பாதுகாப்பு முறைகளை அமைப்பதற்குப் பரிந்துரை செய்தல்;
- ஒரு குழந்தை கொடுமைக்கு ஆளாக்கப்பட்டால், கல்வித்துறை அல்லது பள்ளிக்குத் தெரிவித்தல்;
- கூடுதல் உதவி மற்றும் ஆலோசனை வழங்கக்கூடிய இதர அமைப்புகளுக்கு உங்களைப் பரிந்துரை செய்தல்.

## பாதிக்கப்பட்டவருக்கு உதவி (Victim Support) அமைப்பை தொடர்பு கொள்ளுதல்

இனம் சார்ந்த குற்றம் அல்லது நிகழ்வினால் நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக உங்களுக்குத் தோன்றினால், நீங்கள் பாதிக்கப்பட்டவருக்கு உதவி என்ற குற்றங்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கான தேசிய அறக்கொடை அமைப்பைத் தொடர்பு கொள்ளலாம். பாதிக்கப்பட்டவருக்கு உதவி என்ற அமைப்பு, உணர்வுரீதியான உதவி, தகவல் மற்றும் நடைமுறை உதவிகளை வழங்குகிறது. தேவைப்பட்டால், உங்கள் பொருட்டு அவர்களால் காவல்துறை மற்றும் வீட்டுவசதி நிறுவனங்கள் போன்ற பிற அமைப்புகளையும் தொடர்பு கொள்ள முடியும். 0845 3030 900 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் நீங்கள் பாதிக்கப்பட்டவருக்கு உதவி அமைப்பைத் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் ஆங்கிலத்தில் பேசாதவராக இருந்தால், ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு ஏற்பாடு செய்ய முடியும். உங்கள் மொழியை நீங்கள் குறிப்பிடுவதுடன், உங்கள் தொலைபேசி எண்ணையும் நீங்கள் அளித்தால், ஒரு மொழிபெயர்ப்பாளருடன் ஒரு ஆலோசனையாளர் உங்களைத் தொலைபேசியில் திரும்ப அழைப்பார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அமைப்பாலும் ஆலோசனை வழங்க முடியும் என்பதை நினைவில் கொள்ளவும். அவர்களைத் தொடர்பு கொள்ளும் விவரங்களை உங்கள் உள்ளூர் நூலகம் மற்றும் தொலைபேசி டைரக்டரியில் காணலாம்.